முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) சென்னை, அசோக் நகரில் 7,874 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 12.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை திறந்து வைத்து, மாணவர்களுடன் உரையாடினார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) சென்னை குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 23 மாவட்டங்களில் திறனகங்களை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில்

ரூ.9 கோடியில் - சிறப்பு உயர் திறன் மையம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 4-

விளையாட்டுப் போட்டி மற்றும் பயிற்சியின்போது காயப்படுகின்ற வீரர்களை முழுவதுமாக சரிசெய்து முன்பைவிட அதிக வலிமை மற்றும் மேம்பட்ட திறனுடன் மீண்டும் விளையாட்டுக் களத்திற்குச் செல்வதற்காக தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 9 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு உயர் திறன் மையத்தை (Centre of Excellence) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 9.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, விளையாட்டு போட்டி மற்றும் பயிற்சியின்போது காயப்படுகின்ற வீரர்களை முழுவதுமாக சரிசெய்து முன்பைவிட அதிக வலிமை மற்றும் மேம்பட்ட திறனுடன் மீண்டும் விளையாட்டு களத்திற்கு செல்வதற்கான விளையாட்டு மருத்துவம் மற்றும் நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை துறையின் சிறப்பு உயர் திறன் மையத்தை (Centre of Excellence) திறந்து வைத்தார்.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசின் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை மற்றும் விளையாட்டு காயம் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, பல்வேறு நுண்துளை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த பிரிவில் ஆண்டிற்கு சராசரியாக 3,000 விளையாட்டு வீர்கள் வரை அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களை பரிசோதித்து, அவற்றில் சுமார் 300 நுண்துளை அறுவை சிகிச்சைகளும், மற்றவர்களுக்கு புனர்வாழ்வு ஆலோசனைகளும் வழங்கி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டால் ஏற்படும் காயங்களுக்கான குருத்தணுக்கள் சிகிச்சை, PRP (Platelet Rich Plasma) மற்றும் Intra articular Injection அளிக்கப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சைக்கு முன்னும், அறுவை சிகிச்சைக்குப் பின்னும் தகுந்த மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை மற்றும் விளையாட்டு காய பிரிவினை சர்வதேச தரத்திற்கு இணையாக உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் CoESMAS (Centre of Excellence Sports Medicine and Arthroscopy) என்ற சிறப்பு உயர் திறன் மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் கிராமப்புற, நகர்ப்புற, மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படும் காயங்களுக்கு சர்வதேசதரத்திற்கு இணையாக உடலியங்கியல் உடற்பயிற்சி, விளையாட்டு உளவியல், விளையாட்டு ஊட்டச்சத்து, உயர் செயல்திறன் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு அதிநவீன அறிவியல் முறைகளை கொண்டு 3D Gait Lab with IR cameras, Force Plat போன்ற பல்வேறு கருவிகளை உபயோகப்படுத்தி விளையாட்டு அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு அறிவியல் ஆய்வகம் மூலம் விளையாட்டு வீரர்களின் காயத்தை முழுவதுமாக பரிசோதித்து நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை செய்வதற்கு சர்வதேச தரம் கொண்ட OT Highend table, Multipara Monitor போன்ற கருவிகளை பயன்படுத்தி காயப்பட்ட வீரர்களை முழுவதுமாக சரிசெய்து முன்பைவிட அதிக வலிமையுடன் மற்றும் மேம்பட்ட திறனுடன் மீண்டும் விளையாட்டு களத்திற்கு செல்வதற்கு இந்த மையம் சிறப்பு உயர்திறன் மையமாக (Centre of Excellence) மேம்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையத்தில், தலா ஒரு பேராசிரியர், உதவி பேராசிரியர், மருத்துவ அலுவலர், உடலியங்கியல் உடற்பயிற்சியாளர், உயிரியக்கவியல் நிபுணர், விளையாட்டு உயிரி எந்திரவியல் நிபுணர் மற்றும் 2 உடற்பயிற்சி பயிற்சியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, அவர்கள் மூலம் பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் ஏற்படும் தோள்பட்டை தசைநார் கிழிதல், முழங்கை மூட்டு தசைநார் கிழிதல், மணிக்கட்டு தசைநார் கிழிதல், கணுக்கால தசைநார் கிழிதல், சுளுக்கு போன்ற அனைத்து காயங்களையும் பரிசோதித்து சரிசெய்யப்படுகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு விளையாடுவதற்கு முன்னும், பின்னுமான தகுதி பரிசோதனை (Iso Kinetic, High Performance Training, CPET, Vertec device, Response Timer, Timing Gates) மூலம் கண்டறிய சர்வதேச தரத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இம்மையத்தால் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள SDAT விளையாட்டு வீரர்கள், கிராமப்புற, நகர்ப்புற, மற்றும் தேசிய அளவிலான தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் பயன்பெற்று உடனடியாக அவர்கள் மீண்டும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று சாதனைகளை நிகழ்த்த வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஆர்.சுகந்தி ராஜகுமாரி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்கள் மரு.கவிதா, மரு.அரவிந்த், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.ஆர்.மணி, விளையாட்டு மருத்துவம் துறைத் தலைவர் மரு.பிரபாகர் சிங், விளையாட்டு வீரர்கள், மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய - – மாநில உறவுகள்! தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக்குழுவின் அறிக்கை!

கர்நாடக முதல்வர் சித்தராமையா வரவேற்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

சென்னை, மார்ச் 4-

ஒன்றிய - மாநில உறவுகள் குறித்து ஆராய, தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக்குழு அறிக்கையின் முதற்பாகத்திற்கு வரவேற்புத் தெரிவித்த கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களுக்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஒன்றிய மாநில உறவுகள் குறித்து ஆராய, தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக் குழு அறிக்கையின் முதற்பாகம் குறித்த தங்களது வரவேற்புக்கு நன்றி, மாண்புமிகு சித்தராமையா அவர்களே.

எங்களது முன்னெடுப்புக்கான தங்களது அறிவார்ந்த ஆதரவையும், கூட்டாட்சிக் கருத்தியலைப் புதுப்பிக்கும் முயற்சி கூட்டு முயற்சியாக அமைய வேண்டும் எனத் தாங்கள் அங்கீகரித்திருப்பதையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

"பன்முகத்தன்மை கொண்ட இந்தியக் குடியரசின் ஒற்றுமையை ஒற்றைத்தன்மை கொண்டு நிலைக்கச் செய்ய முடியாது, அரசியலமைப்பின் வழியிலான நம்பகத்தன்மை மூலமே அதனைச் செய்ய இயலும்" எனத் தாங்கள் தெரிவித்திருக்கும் கருத்து மிகச் சரியானது என ஆமோதிக்கிறேன்.

இவ்வாறு - அவ்வறிக்கையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெறும் வகையில்

அயல்நாட்டு நிறுவனம் - (TNSDC) உள்பட பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது!

சென்னை, மார்ச் 4-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டு இளைஞர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை அதிக அளவில் பெறும் வகையில் அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) உள்பட பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெருக்கவும், வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு திறன் மற்றும் மொழிப் பயிற்சி வழங்கவும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) இடையே நேற்று (3.3.2026) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தமிழ்நாட்டின், வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை தமிழ்நாட்டின் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு அளித்து வருகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெருக்கவும், வெளிநாடு நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு உகந்த வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை கண்டறிந்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திதரவும், வெளிநாடு சென்று உயர் கல்வி பயில விரும்பும் இளைஞர்களுக்கு தேவையான ஆவணங்களில் மத்திய அரசின் சான்றொப்பம் (Attestation) இடைத்தரகர்கள் இன்றி, சிரமமின்றி பெற வகை செய்யும் நோக்கங்களுக்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (ஆட்டோமொபைல்), தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (துளவாடங்கள்), தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (சுகாதார நலன்) மற்றும் தென்னிந்திய தொழில் வர்த்தக சபை, ஆர்.எம். கே. குழும கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுடன் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கி.பாலசுப்ரமணியம், தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் பாடி, தென்னிந்திய தொழில் வர்த்தக சபை மூத்த துணைத் தலைவர் வி.என்.சிவசங்கர், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய (ஆட்டோமொபைல்) நிர்வாக இயக்குநர் காசி விஸ்வநாதன் பஞ்சாட்சரம், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய (துளவாடங்கள்) நிர்வாக இயக்குநர் பனாபிஹாரிநாயக், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய (சுகாதார நலன்) நிர்வாக இயக்குநர் லெனின் பயஸ், ஆர்.எம்.கே. குழும கல்லூரி முதல்வர் டாக்டர் கே.கே.சிவஞான பிரபு உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பேடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
385	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Procurement of 200 NB Seamless pipes for renewal of existing aged damaged fire hydrant pipe line
386	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Supply of 150 NB Seamless pipes for renewal of existing aged damaged fire hydrant pipe line

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்:
www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in செ.ம.தொ.இ/1533/ஒப்பந்தப்புள்ளி/2026

மதுரை மாவட்டம் - வலையங்குளம் கிராமம் மதுரை - தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில்

சாலை விபத்தில் உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு !

சென்னை, மார்ச் 4-

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், வலையங்குளம் கிராமம்,

மதுரை - தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஆவியூர் கிராமத்தைச்சேர்ந்ததிரு. முத்துக்குமரன் என்பவரின் மகள் செல்வி. துர்கா தேவி (வயது 17) என்பவர் 02.03.2026 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் அவரது உறவினருடன் இருசக்கர வாகனத்தில் மதுரை தெப்பக்குளம் சாலையில் உள்ள தனியார் மேல்நிலைப்பள்ளிக்கு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதச் சென்றுகொண்டிருந்த போது மதுரையிலிருந்து தூத்துக்குடி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அவர் பயணம் செய்துகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது அரசுப் பேருந்து ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் செல்வி. துர்காதேவி பலத்த காயமடைந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவி செல்வி. துர்காதேவியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அறிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம், மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2026 மனிதநேய 27, தமிழரின் வாழ்வில் ஒளி பிறந்தது! சரித்திரம் தொடர நிலம் மலர்ந்தது! எனும் தலைப்பில் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் விழா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் ஆகியோர் முன்னிலையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவித்தார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, ப.மீ.யாழினி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.